


**20. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நீட் நுழைவு தேர்வு வினாத்தாள் கசிவு பிரச்சனையில் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

2. நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக நடைபெற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் ஃபோர்டு கார் உற்பத்தி நிறுவனம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு அரசு அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கும் என்று முதலமைச்சர் திரு. விஜய் உறுதியளித்துள்ளார்.

4. பொறியியல் படிப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான கலந்தாய்வு தமிழகத்தில் இன்று தொடங்கியது.

5. பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் ரோப்கார் சேவை பராமரிப்பு காரணங்களுக்காக இன்றுமுதல் 45 நாட்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

*********

நாடாளுமன்றம்

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கிய நிலையில் நீட் நுழைவு தேர்வு வினாத்தாள் கசிவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் அவைதலைவர் கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றபோது காங்கிரஸ் சமாஜ்வாதி கட்சியை சேர்ந்த எதிர்கட்சி உறுப்பினர்கள் நீட் வினாத்தாள் கசிவு பிரச்சனையை வலியுறுத்தி குரல் எழுப்பினார்கள்.

அவையின் மாண்பை காத்து அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா அறிவுறுத்தினார்.

ஆனால் எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே மக்களவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் பிற்பகல் இரண்டு மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக இரு அவைகளிலும் மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

*********

பிரதமர் - நாடாளுமன்றம்

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் திரு.நரேந்திரமோடி பருவ மழை செழிப்பை போலவே, நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடரும்,

ஆக்கப்பூர்வமாக நடைபெற்றால் அது மிகுந்த பயனளிக்கும் என்று கூறினார்.

மழையும், மழைக்கால கூட்டத்தொடரும் ஆக்கப்பூர்வமாக அமையும் பொழுது நாட்டு மக்கள் பயனடைவதோடு நாடும் வளர்ச்சி பெறும் என்று கூறினார்.

இந்தியாவின் ஆற்றல் உலகளாவிய அங்கீகாரத்தை பெற்றிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

நம் நாட்டு இளைஞர்களின் ஆற்றலும், எண்ணங்களும் பரந்து விரிந்துள்ள வான்வெளியை போல எல்லையற்ற சக்தி கொண்டது என்ற செய்தியை இது பறைசாற்றுவதாக பெருமிதம் தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதத்தில் நம் தேசம் பல்வேறு சாதனைகளை படைத்திருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்த பிரதமர் தேச, சர்வதேச விண்வெளி நிலைகளில் பெருமை கொள்ளும் தருணமாகும் இது என்று கூறினார்.

சர்வதேச தேக்க நிலையின் மத்தியிலும் நம் நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.7 சதவிகிதமாக பராமரிக்கப்பட்டு துரிதமாக வளரும் பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

தேசத்தின் வலிமையையும் எழுச்சியையும் புதிய உச்சத்தை எட்டுவதற்கான எண்ணத்தையும் இது பிரதிபலிப்பதாக சுட்டிக்காட்டினார்.

இத்தருணத்தில் மழைக்கால கூட்டத்தொடர் புதிய சக்தியுடனும், எழுச்சியுடனும் செயல்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நம் நாட்டில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்களால் இளையோர் வெற்றிகளை குவிக்க முடிவதாக அவர் கூறியுள்ளார்.

ராஜஸ்தானில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், புதிய செமிகண்டக்டர் ஆலை, பசுமை ஹைட்ரஜன் திறனுடன் கூடிய ரயில் இயக்கம் போன்றவற்றை சுட்டிக்காட்டிய பிரதமர், விஞ்ஞானிகள் பொறியாளர்கள் படைப்பாற்றல் திறனாளர்கள் பணியாளர்கள் ஆகிய அனைவரின் தேச வளர்ச்சிக்கான பங்களிப்பிற்கு இது எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்றார்.

*********

அர்ஜுன்ராம் மெஹ்வால்

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சட்ட திருத்த மசோதாவை மத்திய சட்ட அமைச்சர் திரு.அர்ஜுன்ராம் மெஹ்வால் மக்களவையில் இன்று அறிமுகம் செய்தார்.

தற்போதுள்ள 33 நிதிபதிகள் என்ற எண்ணிக்கையை 37ஆக அதிகரிக்க இந்த மசோதா வகை செய்கிறது.

கடந்த மே மாதம் இதற்கான அவசர சட்டத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

*********

சஞ்சய் ஜா, எஸ். பி. சிங் பாகேல்

இதனிடையே நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஐக்கிய ஜனதாதள் கட்சியின் தலைவர் திரு.சஞ்சய் ஜா நாடாளுமன்றம் சுமூகமாக நடைபெற

எதிர்கட்சிகள் ஆக்கப்பூர்வமான பிரச்சனைகளை எழுப்ப வேண்டும் என்று கூறியுள்ளார்.

மேற்காசிய நெருக்கடி நிலைமையில் மத்திய அரசு சிறப்பாக செயலாற்றி தடையற்ற சமையல் எரிவாயு பெட்ரோல் டீசல் விநியோகத்தை உறுதி செய்ததுடன் விலையையும் கட்டுக்குள் வைத்ததாக சுட்டிக்காட்டினார்.

மத்திய அமைச்சர் திரு. எஸ். பி. சிங் பாகேல் செய்தியாளர்களிடம் பேசுகையில் நரேந்திரமோடி தலைமையிலான அரசின் கீழ் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாக எடுத்துரைத்தார்.

நம் நாட்டு இளைஞர்கள் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் விண்வெளி துறைகளில் தனி முத்திரையை பதித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

*********

மன்சூக் மாண்டவியா

நாட்டில் 8 கோடிக்கும் மேற்பட்ட கையெழுத்து பிரதிகள் அறிவுசார் பாரத இயக்கத்தின் கீழ் மின்னனுமயமாக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர் ஆராய்ச்சியை ஊக்குவித்து பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில், இந்த இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியதாக கூறினார்.

இதுவரை ஒருகோடிக்கும் மேற்பட்ட பிரதிகள் மீது ஆய்வு நடத்தப்பட்டிருப்பதாகவும் மூன்று லட்சத்து 74 ஆயிரம் பிரதிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

*********

குடியரசு தலைவர்

மூன்று நாடுகள் பயணத்தின் முதற்கட்டமாக மால்டோவாவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு அந்நாட்டு அதிபர் Maia Sandu – உடன் இருதரப்பு உறவுகள் குறித்து தற்போது ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

வர்த்தகம் முதலீடு கலாச்சாரம் மக்கள் பரிவர்த்தனை உள்ளிட்ட பரஸ்பர நலன்சார்ந்த பிரிவுகளில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

*********

பட்டயகணக்காளர்

நாட்டின் பட்டய கணக்காளர், தணிக்கை அலுவலகமும், இந்திய சமூக ஆராய்ச்சி குழுவும் இணைந்து இளங்கலை, முதுகலை, முனைவர் பட்ட மாணாக்கருக்கான தேசிய ஆராய்ச்சி ஆய்வு கட்டுரை போட்டியை நடத்துகிறது.

பொது நிதி, ஆளுமை, நிதித்துவ கூட்டாண்மை, நீடித்தவளர்ச்சி உள்ளிட்டவற்றில் மாணவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு இந்த போட்டி நடத்தப்படுகிறது.

பட்டய கணக்காளர் தணிக்கை அலுவலக அறிக்கைகளை ஆய்வுக்கு பயன்படுத்திக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போட்டி விவரங்கள் குறித்து அறிய

இதுதொடர்பான தகவல்களை cag.gov.in உள்ளிட்ட இணையதளங்கள் மூலம் தெரிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

*********

முதலமைச்சர் ஃபோர்டு

அமெரிக்காவின் ஃபோர்டு கார் உற்பத்தி நிறுவனம் தமிழ்நாட்டில் மேற்கொள்ள உள்ள உற்பத்தி திட்டங்களுக்கு தமிழக அரசு அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கும் என்று முதலமைச்சர் திரு.விஜய் உறுதியளித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சரை இன்று சந்தித்த ஃபோர்டு நிறுவன உயர்மட்ட குழுவினர் மாநிலத்தில் மீண்டும் தனது உற்பத்தி திட்டத்தை தொடங்குவது குறித்து நடத்திய ஆலோசனையின்போது முதலமைச்சர் இதனை தெரிவித்தார்.

ஃபோர்டு நிறுவனத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான 30 ஆண்டு உறவை நினைவு கூர்ந்த முதலமைச்சர் மறைமலைநகர் உற்பத்தியை முழு அளவில் பயன்படுத்திடும் வகையில் இந்நிறுவனம் விரிவாக்க திட்டத்தை மேற்கொண்டு உற்பத்தியை பெருக்க முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தான உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

*********

முதலமைச்சர் சுற்றுலா

தமிகத்தில் சுற்றுலா துறை சார்ந்த பட்ஜெட்டிற்கு முந்தைய ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெற்றது.

சுற்றுலாவை மேம்படுத்துவது குறித்தும் மாநிலத்தில் முதல் முறையாக கேரவன் சுற்றுலாவை உருவாக்குவது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது.

*********

முதலமைச்சர் சதுரங்கம்

உலக சதுரங்க தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி தமிழகத்தை சேர்ந்த இளைய சதுரங்க வீர வீராங்கனைகளுக்கு தமிழக அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று முதலமைச்சர் திரு.விஜய் கூறியுள்ளார்.

சதுரங்க விளையாட்டால் பள்ளி மாணாக்கரின் நினைவாற்றல் மேம்படுவதோடு பிரச்சனைகளை துணிச்சலுடன் எதிர்கொள்ளும் திறனும் அதிகரிக்கும் என்று திருச்சி தேசிய கல்லூரியின் உடற்கல்வி துறை இணை பேராசிரியர் டாக்டர் பூபதி தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

*********

பொறியியல்

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான கலந்தாய்வு இன்று தொடங்கியது.

ஆகஸ்ட் 30ஆம் தேதிவரை 3 சுற்றுகளாக இக்கலந்தாய்வு நடைபெற உள்ளது.

418 கல்லூரிகளில் ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 825 இடங்கள் உள்ள நிலையில் இரண்டு லட்சத்து 36 ஆயிரம் மாணாக்கர் கலந்தாய்வில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

*********

கைது

முதலமைச்சர் குறித்து அவதூராக பேசியதாக கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில் விளாத்திக்குளம் தொகுதி திமுக சட்டமன்ற உறுப்பினர் திரு.மார்க்கண்டேயனை காவல்துறையினரால் இன்று கைது செய்துள்ளனர்.

இதனிடையே இந்த கைது நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ள திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் மார்க்கண்டேயனுக்கு அடிப்படை சட்ட உரிமைகள் மறுக்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

*********

CBCID

பழனி முருகன் கோவில் நில மோசடி விவகாரத்தில் CBCID போலீஸார் 5ஆம் நாளாக இன்று விசாரணையை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

சார்பதிவாளர் அலுவலகத்தில் CBCID அதிகாரிகள் 3 பேர் கொண்ட குழுவினரும்,

பத்திரபதிவு துறை சார்பில் அமைக்கப்பட்ட 3 பேர் கொண்ட குழுவினரும் தங்களது விசாரணையை தீவிரபடுத்தியுள்ளனர்.

*********

ஆர்பாட்டம்

நியாயவிலைக்கடைகளில் செயல்படுத்தப்படும் தாயுமானவர் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தொடக்க கூட்டுறவு பணியாளர் சங்கம் சார்பில் தமிழகத்தில் இன்று ஆர்பாட்டம் நடைபெற்றது.

நாமக்கல் விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி பணியாளர்கள் கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

*********

நீலகிரி

சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு ஏற்ப நீலகிரி மாவட்டம், மோயார், சிங்காரா, விபூதிமலை சாலைகளில் வெளியூரை சேர்ந்த சுற்றுலா வாகனங்கள் செல்வதற்கான வனத்துறையின் தடை இன்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதனையடுத்து உள்ளூர் வாகனங்கள் மட்டுமே அந்த சாலைகளில் இயங்குவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*********

தேனி

தேனி மாவட்டம் சுருளி நீர்வீழ்ச்சியில் நீர்வரத்து குறைந்ததை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

மறு தேதி குறிப்பிடும் வரை சுற்றுலா பயணிகள் அருவிக்கு வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*********

ரோப்கார்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக ரோப்கார் சேவை இன்றுமுதல் 45 நாட்களுக்கு நிறுத்தப்படுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

*********

கைரேகை பதிவு

தமிழகம் முழுவதும் குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் அனைவரும் கைரேகை பதிவுசெய்வதை அரசு கட்டாயமாக்கியுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் குடும்ப உறுப்பினர்கள் இ-சேவை மையங்களை அணுகி ஆதார் அட்டையில் கைரேகையை புதுப்பித்த பின்னர் நியாயவிலை கடைகளில் தங்களது கைரேகை பதிவை புதுப்பித்துக்கொள்ளுமாறு உணவு பொருள் வழங்கல் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

*********

இருவரி

கூட்டுறவுத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக இத்துறைக்கான அமைச்சர் திரு.காந்திராஜ் இன்று சென்னை தலைமை செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார்.

திருப்பூர் மாவட்டத்தில் வரும் செப்டம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ள காரீஃப் பருவ பயிர் காப்பீட்டை மக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.மணீஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.ரஞ்சித் சிங் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

*********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது